இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 257 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 15 – செவ்வாய்க்கிழமை 28 ஏப்ரல் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 257 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 15 - Tuesday 28 April 2026 - Dak 8 Pages ₹ 5.00

## கொடைக்கானலில் இரண்டாவது நாளாக நடைபயிற்சி மேற்கொண்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களுடன் கலந்துரையாடல்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் கொடைக்கானலில் நேற்று (27.04.2026) பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்!

## வழியெங்கும் மக்கள் திரண்டு வரவேற்றனர்!

**கொடைக்கானல், ஏப். 28 - கொடைக்கானலில் இரண்டாவது நாளாக நடைபயிற்சி மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வழியெங்கும் பொதுமக்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர். அப்போது முதல்வர் அவர்கள் பொதுமக்களுடன் கலந்துரையாடி நலம் விசாரித்தார்.**

தேர்தலையொட்டி, முதலமைச்சரும் – தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பல்வேறு மாவட்டங்களுக்கும் தொடர்ச்சியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

தற்போது வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், குடும்பத்தினருடன் கொடைக்கானலில் ஓய்வெடுக்க சென்றுள்ளார்.

சென்னையில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது குடும்பத்தினருடன் தனி விமானத்தில் மதுரைக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் கொடைக்கானல் வருகை தந்தார்.

வழிநெடுகிலும் சாலையோரம் திரண்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்களுக்கு கையசைத்தபடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்றார். வத்தலக்குண்டு, காட்ரோடு, பெருமாள்மலை, மூஞ்சிக்கல் ஆகிய இடங்களிலும் ஏராளமானோர் திரண்டு முதலமைச்சருக்கு கையசைத்தபடி வாழ்த்துத் தெரிவித்தனர்.

பின்னர் கொடைக்கானல் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பத்துடன் தங்கியுள்ளார். முதல்வர் வருகையை முன்னிட்டு கொடைக்கானலில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தினமும் காலையில் விடுதி வளாகம் அல்லது நட்சத்திர ஏரியில் நடைபயிற்சி மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், நேற்று காலை மனோரஞ்சித நீர்த்தேக்கத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குடும்பத்தினருடன் நடைபயிற்சி மேற்கொண்டார். அங்கிருந்து திரும்பும் வழியில் சாலையில் குவிந்திருந்த பொதுமக்களுடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். அப்போது, முதலமைச்சருடன் பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்.

---

## வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயரின் பணிகள்தான் இன்றும் நம்மை இயக்கும்!

# ‘திராவிட மாடல்’ அரசின் பயணம் மேலும் உறுதியோடு தொடரும்!

### பிறந்தநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

கொடைக்கானல், ஏப். 28-

வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயர் அவர்களின் பிறந்த நாள் ஏப்ரல் 27. இதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவு வருமாறு:-

ஏப்ரல் 27 : நம் வேரான நீதிக் கட்சிக்கு நீர் வார்த்து வளர்த்த தந்தையாம் வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயர் அவர்களின் பிறந்தநாள்.



மாநகராட்சி மன்றத் தலைமைப் பொறுப்பில் இருந்து சென்னையின் தொடக்கக்கால வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். எவர் மீதும் வெறுப்புணர்வைக் காட்டாத பண்பிற் சிறந்தவர்.

பார்ப்பனரல்லாதாரின் உரிமைகள், கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்காகத் தியாகராயர் ஆற்றிய பணிகள்தான் இன்றும் நம்மை இயக்கும் திராவிட மாடல் அதன் பயணம் மேலும் உறுதியோடு தொடரும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## டெல்லி உயர்நீதிமன்ற

# நீதிபதி முன் ஆஜராகப் போவதில்லை!

### டெல்லி முன்னாள் முதல்வர் கெஜ்ரிவால் அறிவிப்பு!

புதுடெல்லி, ஏப். 28 - ஒன்றிய அரசுக்கு ஆதரவாக தொடர்ந்து செயல்படும் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி முன், சி.பி.ஐ மேல்முறையீட்டு வழக்கில் ஆஜராகப் போவதில்லை என அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டெல்லி மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில், முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா ஆகியோரை டெல்லி நீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் விடுவித்தது. இதனை எதிர்த்து சிபிஐ டெல்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இந்த வழக்கு நீதிபதி ஸ்வர்ணகாந்தா சர்மா முன் அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதி ஸ்வர்ணகாந்தாவின் பிள்ளைகள் ஒன்றிய அரசு வழக்கறிஞர்களாக உள்ளதால், ஒன்றிய அரசுக்கு சதகமாக நீதிபதி செயல்படு வாய்ப்புள்ளதாகவும், இதனால், வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதி ஸ்வர்ணகாந்தா தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் எனக் கூறி கெஜ்ரிவால் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இக்கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி ஸ்வர்ணகாந்தா, வழக்கு விசாரணைக்கு கெஜ்ரிவால் ஆஜராக



வேண்டும் என உத்தரவிட்டார். இந்நிலையில், வீடியோ பதிவொன்றை வெளியிட்டுள்ள கெஜ்ரிவால், நீதிபதி ஸ்வர்ண்காந்தா சர்மாவிடமிருந்து நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை முற்றிலும் தகர்ந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தனது மனசாட்சிக்கு செவிசாய்த்து, காந்திஜியின் கொள்கைகளைக் கடைப்பிடித்து, சத்யாகிரக உணர்வுடன் — நீதிபதி ஸ்வர்ண்காந்தா முன் தான் ஆஜராகப் போவதில்லை என்றும், எவ்வித வாதங்களையும் முன்வைக்கப்போவதில்லை என்றும் முடிவெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில், நேரடியாகவோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராவதால், அர்த்தமுள்ள எந்த விளைவுகளும் ஏற்படாது என்றும் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார். மேலும், நீதிபதி ஸ்வர்ணகாந்தாவின் உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளதாகவும் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

---

## 35 ஆண்டு காலப் போராட்டம் வெற்றி!

# பட்டியல் இனத்தவருக்கு உள் ஒதுக்கீடு!

### கருநாடக அமைச்சரவை முடிவு!

பெங்களூரு, ஏப். 28 - கருநாடகாவில் பட்டியல் பிரிவில் உள்ள தாழ்த்தப்பட்டோர் சமுதாய மக்களுக்கான 15 சதவீத இட ஒதுக்கீட்டில் உள் இட ஒதுக்கீடு வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது. முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கருநாடகாவில் 50 சதவீதம் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் 15 சதவீதம் தாழ்த்தப்பட்டோர் மக்களுக்கும், 3 சதவீதம் பழங்குடியினருக்கும், ஓபிசி பிரிவினருக்கு 32 சதவீதம் என இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்த இடஒதுக்கீட்டு முறை தான் கருநாடகாவில் கல்வி, வேலை வாய்ப்புகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான் தாழ்த்தப்பட்டோர் மக்களுக்கான 15 சதவீத இடஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்டோர் மக்களில் ஒவ்வொரு பிரிவினருக்கும் உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது.

இதன்மூலம் அனைத்து தாழ்த்தப்பட்டோர் பிரிவு மக்களும் கல்வி, அரசு வேலைவாய்ப்புகள் பெற்று முன்னேற முடியும். தற்போதைய இட ஒதுக்கீடு முறையில் ஒரு குறிப்பிட்ட பிரிவை சேர்ந்தவர்கள் மட்டுமே முன்னேறுவதாக குற்றச்சாட்டுகள் இருந்தன. இதனால் பட்டியல் இனத்தில் தாழ்த்தப்பட்டோர் மக்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று பல போராட்டங்கள் முன்னெடுத்து வரப்பட்டன. தொடர்ந்து 35 ஆண்டுகளாக இந்த கோரிக்கைகள் நிலுவையில் இருந்தன. எந்த அரசும் இந்த கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

#### உள் இடஒதுக்கீடு

இந்நிலையில் தான் தற்போது கருநாடகா அரசு கோரிக்கையை நிறைவேற்றி உள்ளது. கருநாடகாவில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடக்கிறது. முதலமைச்சராக சித்தராமையா உள்ளார். 25.4.2026 அன்று கருநாடகா அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்த அமைச்சரவை கூட்டத்தில் பட்டியல் ஜாதியில் தாழ்த்தப்பட்டோர் மக்களுக்கு வழங்கப்படும் 15 சதவீத இடதுக்கீட்டில் உள்ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இம்முடிவை கருநாடக முதலமைச்சர் சித்தராமையா அண்மையில் அறிவித்த நிலையில் தற்போது அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

#### உள் இடஒதுக்கீட்டில் யாருக்கு எவ்வளவு?

இந்த உள்ஒதுக்கீட்டின் படி மொத்தமுள்ள 15 சதவீத இடஒதுக்கீட்டில் “இடது கை”, “வலது கை” பிரிவுகளுக்கு தலா 5.25 சதவீதம், பிற பட்டியல் ஜாதியினருக்கு 4.5% உள் இடஒதுக்கீடு வழங்கப்படு கிறது. புரியும்படி கூற வேண்டும் என்றால் எஸ்சி மக்களுக்கான 15 சதவீத இடஒதுக்கீட்டில் Left Hand பிரிவு என்று உள்ள எஸ்சி சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு 5.25 சதவீதம், Right Hand பிரிவில் உள்ள எஸ்சி சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு 5.25 சதவீதம், பிற பிரிவனருக்கு 4.5 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விகிதாச்சார பிரதிநிதித்துவத்தை அடிப்படையாக கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் சித்த ராமையா தெரிவித்துள்ளார். மேலும் பட்டியல் ஜாதியினருக்கு உள் இடஒதுக்கீட்டு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கியதும் இந்த ஒப்புதல் சட்டமாக இயற்றப்படும் என்று கூறியுள்ளார். விரைவில் கருநாடகாவில் 56,000 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இந்த பணியிடங்கள் உள்இடஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்படும் என்பதையும் அவர் உறுதியாக தெரிவித்துள்ளார்.

---

## மேற்குவங்கத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவு !

# 142 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு!

### ஏற்பாடுகள் தீவிரம்!

கொல்கத்தா, ஏப். 28 - மேற்குவங்கத்தில் 2வது மற்றும் கடைசி கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

142 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் நிலையில், முதற்கட்டமாக கடந்த 23ம் தேதி 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்று முடிந்தது. மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவி வரும் நிலையில், இரு கட்சிகளும் போட்டி போட்டு பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், 2வது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.